சுற்றுநிருப இல: 94/03

எனது இல: 4/ஆதா/2/330 (111)
ஆசிரியர் தாபனக் கிளை,
கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு,
''இசுருபாய''
சிறீ ஜயவர்தனபுர கோட்டே,
பத்தரமுல்ல.

சகல மாகாணக்கல்விச் செயலாளர்களுக்கும், மாகாணக்கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

கொழும்புப் பல்கலைக்கழகத்திலே கல்விப்பீடத்தினூடாக
நடத்தப்படும் பட்டப்பின் படிப்பு (டிப்ளொமா)
(வார இறுதி) தொடரும் ஆசிரியர்கள் தொடர்பாக
<u>படிப்பு விடுதலைக்கு அனுமதி வழங்குதல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக நீங்கள் கூறியபடி எனது இலக்கம் 4/ஆதா/2/கா/329 (11) உம் 1992.07.31 ஆந் திகதிய சுற்று-நிருபத்தின் இரண்டாம் (02) பந்தி கீழ்வருமாறு திருத்தஞ் செய்யப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

(2) மேற்படி பாடநெறியைத் தொடரும் சகல ஆசிரியர்கள் தொடர்பாக அப்பாடநெறி நடைபெறும் வாரஇறுதிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமையோ அடுத்துவரும் திங்கட்கிழமையோ ஆகிய இரு தினங்களில் ஒரு தினத்தை கடமை விடுமுறையாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

(3) ஒரு நாளுக்கான இக்கடமை விடுமுறையை இந்தப் பாடநெறியைப் பின்பற்றும் பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

தயவு செய்து இந்தத் திருத்தத்தை உங்கள் மாகாணத்திற்குரிய சகல பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம்: என். வி. கே. கே. வேரகொட
செயலாளர்,
கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு,

பிரதிகள்: -
1. கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சு - சகல கிளைத் தலைவர்களுக்கும்,
2. செயலாளர், கல்விச் சேவைச் சபை,
3. கணக்காய்வாளர் நாயகம்,